### ஆத்தூர் தொகுதியில் உள்ள குளங்களுக்கு

# மழை தண்ணீர் வரும் படி வாய்க்கால்கள் அமைத்துக் கொடுக்கப்படும்!

## அமைச்சர் ஐ.பெரியசாமி உறுதி!



திண்டுக்கல், நவ. 4-

ஆத்தூர் தொகுதியில் விவசாயிகளின் 60 வருட கோரிக்கைகளுக்கு நிரந்தர தீர்வு காணப்படும் என்று ஆத்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடைபெற்ற நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பேசியதோடு ஆத்தூர் தொகுதியில் உள்ள குளங்களுக்கு மழை தண்ணீர் வரும் படி நீர்வரத்து வாய்க்கால்கள் அமைத்துக் கொடுக்கப்படும் என அமைச்சர் ஐ.பெரியசாமி உறுதியளித்தார்.

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் ஒன்றிய அலுவலகத்தில் 22 கிராம ஊராட்சிகளில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களின் சிரமங்களை குறைக்கும் வண்ணம் தூய்மை பணியாளர்களுக்கு குப்பைகளை எடுத்துச்செல்ல இகார் பேட்டரி வாகனம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சியர் மொ.ந. பூங்கொடி தலைமை தாங்கினார். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் பெ.திலகவதி, திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஆத்தூர் நடராஜன், தண்டபாணி, மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் மு.பாஸ்கரன், ஒன்றிய பெருந்தலைவர் மகேஸ்வரி முருகேசன், துணைத்தலைவர் ஹேமலதா மணிகண்டன், ஒன்றிய செயலாளர்கள் பாறைப்பட்டி ராமன், முருகேசன், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பேசியதாவது:-

கடந்த 33 ஆண்டுகளாக ஆத்தூர் தொகுதி மக்கள் எனக்கு அளித்து வரும் ஆதரவிற்கு என்றும் நான் கடமைப்பட்டுள்ளேன். ஆத்தூர் தொகுதியின் பொதுமக்கள் கோரிக்கைகள் அவர்கள் கேட்காமலேயே நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆத்தூர் தொகுதிக்குட்பட்ட ரெட்டியார்சத்திரம் ஒன்றிய பகுதிக்கு முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆட்சியின் போது காவிரி கூட்டு குடிநீர் கொண்டுவரப்பட்டது. அதன்பின்பு அந்த திட்டத்தை அவர்கள் முறையாக செயல் படுத்தவில்லை. அதனால் அப்பகுதி பொதுமக்கள் பாதிக்கப்பட்டனர்.

மீண்டும் திராவிட மாடல் ஆட்சி நாயகர் கழகத்தலைவர், மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆட்சி அமைந்தவுடன் ரெட்டியார்சத்திரம் ஒன்றியத்தில் மட்டும் கிராம ஊராட்சிகளில் 196 மேல்நிலை தண்ணீர் தொட்டிகள் கட்டப்பட்டு அதன் மூலம் அனைவரின் வீடுகளுக்கு தங்கு தடையின்றி குடிநீர் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இது போல ரெட்டியார்சத்திரம் ஒன்றியத்தில் உள்ள அனைத்து குளங்களுக்கும் மழை பெய்தால் ஒரு சொட்டு தண்ணீர் கூட வீணாகாத அளவிற்கு சிமெண்ட் வாய்க்கால்கள் அமைத்து கொடுக்க திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகிறது. இது போல ஆத்தூர் ஒன்றியத்திலும் நீர்; நிலைகளை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

ஆத்தூர் தொகுதி விவசாயிகளின் நலன்காக்க அவர்களின் 60 வருட கோரிக்கையை நிறைவேற்ற திட்டங்கள் தயாரிக்கப்பட்டது. அதை நிறைவேற்றினால் விவசாயிகள் பயிர்களை பயிரிடுவதற்கு தண்ணீர்; இல்லை என்ற கவலையில்லாமல் போய்விடும் என்றார். திண்டுக்கல் ஆத்தூர் மற்றும் சில பேரூராட்சிகளில் குடி தண்ணீர் பிரச்சினையை தீர்க்க வைகை அணையில் இருந்து குழாய்கள் மூலம் குடிதண்ணீர் கொண்டு வர ரூ.600 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த திட்டத்தை செயல்படுத்தி விட்டால் திண்டுக்கல், சின்னாள பட்டி, வத்தலகுண்டு, சேவுகம் பட்டி, நிலக்கோட்டை உட்பட பேரூராட்சிகளுக்கு தினசரி குடி தண்ணீர்; கிடைக்கும் நிலைமை உருவாகும்.

ஆத்தூர் தொகுதியை பொறுத்தவரை கூட்டுறவு துறை மூலம் கல்லூரி மட்டுமின்றி விரைவில் தொழிலாளர் நலனுக்கான மருத்துவமனை நீதிமன்றத்திற்கான புதிய கட்டிடம் தீயணைப்பு நிலையத்திற்கான புதிய கட்டிடம் கட்டப்பட உள்ளது. இது தவிர கிராமப்புற இளைஞர்களின் நலன் கருதி மாபெரும் விளையாட்டு மைதானம் அமைய உள்ளது. இளைஞர்களின் எழுச்சி நாயகன் வருங்கால தமிழகம் மாண்பு மிகு துணை முதல்வர் உதயநிதி அவர்களின் சீறிய செயல்பாட்டால் தமிழகம் விளையாட்டு துறையில் மேம்பட்டு வருகிறது. கிராமப் புற மாணவர்களும் விளையாட்டு துறையில் இந்திய அளவில் சாதனை படைக்க தொடங்கிவிட்டார்கள்.

இவ்வாறு அமைச்சர் ஐ.பெரியசாமி பேசினார்.

நிகழ்ச்சியில் ஆத்தூர் மேற்கு ஒன்றிய துணை செயலாளர்கள் கலா பச்சை, கருத்தராஜா, சக்திவேல், பொருளாளர் தேவரப்பன்பட்டி போஸ், கிழக்கு ஒன்றிய துணை செயலாளர்கள் எம்.சி. பாண்டியன், பஞ்சம்பட்டி வசந்தா கென்னடி, பொருளாளர் ஜாதிகவுண்டன் பட்டி கருப்பையா, பேரூராட்சிமன்ற தலைவர்கள் சித்தயன் கோட்டை போதும் பொண்ணு முரளி, அய்யம்பாளையம் ரேகா அய்யப்பன், சின்னாள பட்டி பேரூராட்சிமன்ற தலைரவர் பிரதீபா கனகராஜ், துணைத் தலைவர் ஆனந்தி பாராதிராஜா, மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி துணை அமைப்பாளர் பாறைப்பட்டி வாஞ்சிநாதன், அகரம் பேரூராட்சி மன்றத் தலைவர் நந்தகோபால், மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர்கள் கும்மம்பட்டி விவேகானந்தன், பஞ்சம்பட்டி மணி,

மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் பொன்முருகன், திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஷ், பேரூர் கழக செயலாளர்கள் சின்னாள பட்டி மோகன் ராஜ், அய்யம்பாளையம் தங்கராஜ், சித்தையன் கோட்டை சக்திவேல்,

ஊராட்சி மன்றத்தலைவர்கள் அக்கரைப்பட்டி லட்சுமி சக்திவேல், பிள்ளையார்நத்தம் உலகநாதன், வீரக்கல் ராஜேஸ்வரி தங்கவேல், துணைத்தலைவர் யூஜின், ஆத்தூர் ஜம்ரூத்பேகம், சீவல்சரகு ராணிராஜேந்திரன், ஊராட்சிமன்ற தலைவர்கள் செட்யடிபட்டி ராஜா, தொப்பம்பட்டி கருப்பையா, அம்பாத்துரை சேகர், வக்கம்பட்டி பேட்ரிக் பிரேம்குமார், போடிக்காமன்வாடி நாகலெட்சுமி சதீஸ்குமார், காந்திகிராமம் தங்கமுனியம்மாள்,

ஆலமரத்துபட்டி ஆறுமுகம், பஞ்சம்பட்டி பாப்பாத்தி, ஒன்றிய குழு உறுப்பினர்கள் செல்வி காங்கேயன், சிந்தாமணி நாகசுந்தரம், வண்ணம் பட்டி காணிக்கைசாமி, ஆத்தூர் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் வீரக்கல் காங்கேயன், அரசு ஒப்பந்தகாரர்கள் ஜீசஸ் அகஸ்டின், மெல்வின், மற்றும் திமுக இளைஞர் அணியினர், சார்பு அணியினர், மகளிர் அணியினர் உட்பட தி.மு.க. நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.




கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட திமுக இளைஞர் அணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் கழக முப்பெரும் விழா தெருமுனைக்கூட்டம் ஈத்தாமொழி சந்திப்பில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் சரவணன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் மேயர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். கூட்டத்தில் மாநில மகளிர் அணி செயலாளர் திருமதி. ஹெலன் டேவிட்சன், மாநில கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை செயலாளர் தில்லைச்செல்வம், ஒன்றிய செயலாளர்கள் லிவிங்ஸ்டன், செல்வம், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் பிரிட்டோ சேம், மாணிக்பிரபு, என் உயிரினும் மேலான கலைஞர் நூற்றாண்டு பேச்சுப்போட்டியில் மண்டல மற்றும் மாநில அளவில் கலந்து கொண்ட இளம் பேச்சாளர் செல்வி. ஹரிணி சிவனேசன் உட்பட உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளை கழக நிர்வாகள் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி :** ஏண்ணே; மலேயா நாடாளுமன்றத்தில் அந்த நாட்டின் பிரதமர் அன்வர் இப்ராஹிம், தமது பட்ஜெட் உரையை, திருக்குறளை மேற்கோள் காட்டித் தொடங்கி இருக்கிறாரே ?

**பெரியதம்பி :** **ஆமாம் தம்பி; மலேயா மட்டுமல்ல, உலக நாடுகள் பலவற்றிலும் திருக்குறளின் அரிய பெருமைகளை தலைமேலேற்றிக் கொண்டாடுகிறார்கள்.**

**நமது பிரதமரும் அடிக்கடி திருக்குறளைப் பயன்படுத்துகிறார். ஆனால் "திருக்குறளை இந்தியாவின் தேசிய நூல் என அறிவிக்க வேண்டும்" என்ற நமது நீண்டகாலக் கோரிக்கையை மட்டும் நிறைவேற்ற முன்வர மாட்டார்.**

**வாயால் வடை சுடுவது, எதற்கும் பயன்படாது; ஏமாற்றுவதற்குத்தான் பயன்படும் !**

# அரியலூர் மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் சா.சி.சிவசங்கர் அறிக்கை!



அரியலூர், நவ. 4-

அரியலூர் மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சா.சி.சிவசங்கர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

அரியலூர் மாவட்ட செயற்குழு கூட்டம் 06.11.2024 புதன்கிழமை காலை 10.30 மணியளவில் அரியலூர் புற வழிச்சாலையில் உள்ள ரிதன்யா மஹாலில் கழக சட்டத்திட்ட திருத்தகுழு இணை செயலாளர் சுபா. சந்திரசேகர் தலைமையில், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், கொள்கைப் பரப்பு துணை செயலாளர் ச.அ.பெருநற்கிள்ளி, தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.பி.பால சுப்ரமணியன் ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது. இக்கூட்டத்தில் தலைமைக் கழகத்தால் நியமிக்கப்பட்டுள்ள சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர்கள் முனைவர் சபாபதி மோகன், திருமதி கலா சுந்தரமூர்த்தி, ஏ. கே.அருண் கலந்துகொள்கிறார்கள்

அதுசமயம் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், மாவட்ட அணி நிர்வாகிகள், மற்றும் கழக நிர்வாகிகள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: 1. கழகத் தலைவர் அவர்கள் வருகை.

2.தொகுதி பொறுப்பாளர்கள் அறிமுகம்.

3. வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல்.

4. கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வேதாரண்யம் செ.யூசுப்
### நவம்பர் 4 (2013)



பள்ளிப் பருவத்திலிருந்தே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு வேதாரண்யம் பகுதியில் கழகத்தை வளர்த்த முன்னோடிகளில் இவரும் ஒருவர்.

திருத்துறைப்பூண்டி வட்டக் கழக துணைச் செயலாளராகவும், 25 ஆண்டுகள் தொடர்ந்து வேதாரண்யம் ஒன்றியக் கழகச் செயலாளராகவும், தலைமை செயற்குழு உறுப்பினர், பொதுக்குழு உறுப்பினர், தலைமைக் கழக பேச்சாளராகவும் திறம்பட பணியாற்றியவர்.

இரண்டு முறை நாகை மாவட்ட ஊராட்சி மன்றத் துணைத் தலைவராகப் பணியாற்றி வேதாரண்யம் பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

1964ல் நடைபெற்ற மொழிப் போராட்டத்திலும், கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### தாம்பரம் –
# காட்டாங்கொளத்தூர் இடையே சிறப்பு ரெயில்கள் இயக்கம்!

சென்னை, நவ.4–

சென்னை, தெற்கு ரெயில்வே சென்னை கோட்டம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:

தீபாவளி பண்டிகையை கொண்டாட சொந்த ஊர்களுக்கு சென்று விட்டு சென்னை திரும்பும் பயணிகளின் வசதிக்காக சிறப்பு மின்சார ரெயில்கள் இயக்கப்படுகிறது.

அதன்படி, காட்டாங்கொளத்தூரில் இருந்து இன்று (திங்கட்கிழமை) அதிகாலை 4, 4.30, 5, 5.45, 6.20 ஆகிய நேரங்களில் தாம்பரத்திற்கு சிறப்பு மின்சார ரெயில்கள் இயக்கப்படுகிறது. இந்த ரெயில் பொத்தேரி, கூடுவாஞ்சேரி, ஊரப்பாக்கம், வண்டலூர் ஆகிய ரெயில் நிலையங்களில் நின்று செல்லும்.

அதே போல, தாம்பரத்தில் இருந்து அதிகாலை 5.05 மணி மற்றும் 5.40 மணிக்கு காட்டாங்கொளத்தூருக்கு 2 சிறப்பு மின்சார ரெயில்கள் இயக்கப்படுகிறது.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளது.

### புதுக்கோட்டை வடக்கு மாவட்டத்தில்
# பாகமுகவர்கள் (BLA2) ஆலோசனைக் கூட்டம்!



## மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் அறிவிப்பு!

**விராலிமலை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஒன்றிய வாரியாக (BLA-2) கூட்டம் 04.11.2024**

| நேரம் | ஒன்றியம் | இடம் |
|---|---|---|
| காலை 9 மணி | விராலிமலைகிழக்குஒன்றியம் | அழகுநாச்சியம்மன் மஹால் களமாவூர் |
| காலை 10 மணி | அன்னவாசல் தெற்கு & அன்னவாசல் பேரூர் | அண்ணா மண்டபம் அன்னவாசல் |
| காலை 11 மணி | அன்னவாசல் வடக்கு & இலுப்பூர் பேரூர் | சமுதாய கூடம் இலுப்பூர் |
| மதியம் 12 மணி | விராலிமலை மத்திய ஒன்றியம் | மாலாமங்கள மஹால் விராலிமலை |
| மதியம் 1245 | விராலிமலை மேற்கு ஒன்றியம் | ஒன்றிய அலுவலகம், விராலிமலை |

**கந்தர்வகோட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஒன்றிய வாரியாக (BLA-2) கூட்டம் 05.11.2024**

| நேரம் | ஒன்றியம் | இடம் |
|---|---|---|
| காலை 10 மணி | குன்றாண்டார் கோவில் கிழக்கு, மேற்கு, மத்திய ஒன்றியங்கள் கீரனூர் & பேரூர் கழகம், அன்னவாசல் வடக்கு ஒன்றியம் | OSP திருமணமஹால் கீரனூர் |
| காலை 11மணி | கந்தர்வகோட்டை வடக்கு & கந்தர்வகோட்டை தெற்கு ஒன்றியம் | AIT -திருமண மண்டபம் |
| மதியம் 12 மணி | கறம்பக்குடி வடக்கு ஒன்றியம் & கறம்பக்குடி பேரூர் | ராஜ சங்கீத மஹால் கறம்பகுடி |

**புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஒன்றிய வாரியாக (BLA-2) கூட்டம் 10.11.2024**

| நேரம் | ஒன்றியம் | இடம் |
|---|---|---|
| காலை 9.30 மணி | புதுக்கோட்டை வடக்கு ஒன்றியம் | வீரடி விநாயகர் மஹால் ஆதனக் கோட்டை |
| காலை 10.30மணி | கறம்பக்குடி தெற்கு ஒன்றியம் | வெட்டன் விடுதி |
| காலை 11.30மணி | புதுக்கோட்டை தெற்கு ஒன்றியம் | மாவட்ட கழக அலுவலகம், புதுக்கோட்டை |
| மதியம் 12.30 மணி | புதுக்கோட்டை மாநகரம் | மாவட்டகழக அலுவலகம், புதுக்கோட்டை |

**கே.கே.செல்லபாண்டியன்**
செயலாளர்
புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தி.மு.க.